www.tamilarangam.net

விலை ரூபா 10.00

தமிழீழ மக்கள் கட்சியின் அரசியல் ஏடு

# தமிழீழம்

மக்களுக்கே அனைத்து அதிகாரங்களும்

ஐப்பசி 2000

இதழ் -19

வன்முறை வேணாம், ஜனநாயக வழி எண்டு சொல்லுறாங்க!

பின்ன, வன்முறையாலதானே எலெக்சன்ல வெல்லுறாங்க . . .!

இவங்களும் இவங்கட ஆட்சியும்!

- சனத்தின் குரல்-

## "தேசிய அரசாங்க" அழைப்பும்,

# அழித்தொழிப்புக்கான யுத்தமும்

பொதுசன முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனமானது நம்தேசத்தின் மீது புதுவகை யுத்தப் பிரகடனமொன்றைச் செய்துள்ளது. தேசிய அரசாங்கம் என்ற ஜனநாயக சொல்லாடலுடன் இணைந்த, அழித்தொழிப்பு யுத்தம் என்ற இப்பிரகடனத்திற்கு சிங்கள தேசத்தின் ஒருமித்த இணக்கத்தைப் பெறுவது அதன் ஒரே இலக்காகும். "தேசிய அரசாங்கமும் புலிகள் அழித்தொழிப்பும்" எனும் இப்புதுப்பிரகடனம் அனைத்து சிங்கள மக்களையும் ஈர்க்கும் விதத்தில் தேர்தல் கொள்கையாக முன்வைக்கப்பட்டிருந்தது.

சிங்கள சோவினிசத்தின் வழமையான இரட்டைநிலை இம்முறை கைவிடப்பட்டு, பிரதான நிகழ்ச்சிநிரலாக ஒரேயொரு தீர்மானமாக, முனைப்பான யுத்தம், எந்தவித பேச்சுக்களுக்கும் இடமில்லாத தங்குதடையற்ற யுத்தம், அழித்தொழிப்பு யுத்தம் என்ற அறிவிப்பை மிகத்தெளிவாகவே சந்திரிகா செய்துள்ளார். தோல்வியின் விளிம்பில் நிற்கின்ற போதிலும் கூட, ஈழத்தமிழரின் தேசிய கோரிக்கைகளை சகித்துக்கொள்ள தயாரற்ற சோவினிச ஆதிக்க குழுமம் போர் முனையில் விடுதலைப்புலிகளை அழித்து, அதன் பேரில் நம் மக்களையும் நகரங்களையும் கிராமங்களையும் அழித்து, எமது தேசிய இறைமையை நிர்மூலம் செய்வதும் கருவறுப்பதுமே இப்பிரகடனத்தின் அரசியல் சாரமாகும்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பாரம்பரியம் 1958இல் தமிழ் மொழியழித்தது. 1972 இல் புதிய பௌத்த அரசியல் சாசனம் புகுத்தியது. 1994 இல் பொதுசன முன்னணி என்பதாக வடிவம் எடுத்து "சமாதானத்திற்கான யுத்தத்தை" பிரகடனம் செய்தது. இன்று சிங்கள சோவினிச புதிய அணிச்சேர்க்கையொன்றை பலமாக உருவாக்கிக் கொண்டு தேசிய அரசாங்கமும் புலிகள் அழித்தொழிப்பும் என்ற கொள்கைப் பிரகடனம் செய்துள்ளது. இதுவரைகால பரிணாம வளர்ச்சியானது ஒரு இறுதியான தீர்மானகரமான பாசிச வடிவமாக, இன்று பிறப்பெடுத்துள்ளது.

சந்திரிகா அரசு மட்டுமன்றி அதற்கு போட்டியாக வரும் சக்திகளும் கூட, நமது தேசிய விடுதலைப் போராட்டத்தை முறியடிப்பது என்ற ஒரு கருத்திலேயே உள்ளன. புலிகளை ஒழிக்க போர்க்கோலம் பூண்டுள்ள சிகள உறுமய, நாட்டைத் துண்டாட விடமாட்டோம் எனும் ஜேவிபி, இரட்டை மொழிபேசும் யூஎன்பி அனைத்துமே, நம் தேசிய நலனுக்கு எதிராக ஒரே கருத்தையே கொண்டுள்ளன. இதற்கு ஆதரவாக சிங்கள மக்களின் இணக்கத்தைப் பெறுவதிலேயே தீவிரமாக நிற்கின்றனர். சிங்கள தேசத்தின் இருப்பே நம் விடுதலைப் போராட்டத்தை

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

## தென்தமிழீழம்: விளிம்புநிலைக் குரல்கள்

மூதூரின் ஈச்சிலம்பத்தை பிரதேசத்திலுள்ள பூநகர் கிராமத்தில் சிங்கள "ஊர்காவல்படை" வெறியர்களினால் குதறிக் கொல்லப்பட்ட நமது மக்களின் அவலக் கூக்குரல் இன்னும் நமது செவிப்பறைகளில் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றன.

யார் இம்மக்கள்? தமது உழைப்பின் வலிமையால், கரங்களின் பலத்தால் நமது தேசத்தை வாழவைக்கும் விவசாய மக்கள். ஆனால் இவர்களைப் பற்றி எம்மில் பல ருக்கு அக்கறை கிடையாது. இவர்கள் எப்படி ,எவ்வாறு வாழ்கிறார்கள்? இவர்களது தேவைகள் என்ன? என்பது பற்றி யாரும் கவலைப்படவில்லை. நமது தேசத்தின் அதிகாரமும் செல்வாக்குமிக்க மக்கள் பிரிவினரிலிருந்தும் புறமொதுக்கப்பட்டவர்களாக, சமூகத்தின் ஒட்டுமொத்த அக்கறையிலிருந்து புறக்கணிக்கப் பட்ட வர்களாக இவர்கள் உள்ளனர். இதன் காரணமாகவே எதிரிகளின் அட்டகாசங்களு க்கு இவர்கள் எளிதில் உள்ளாக நேர்வதுடன், இவர்கள் நாளாந்தம் எதிர் கொண்டு வரும் சிங்கள இனவெறி அடக்குமுறைகள் வெளித்தெரியாமல் அமிந்து போகின்றன. அண்மைக் காலத்தில் இதேபிரதேசத்திலுள்ள குமரபுரம் கிராம த்திலும் பலர் இவ்வாறு படையினரால் படு கொலை செய்யப்பட டனர் என்பது நினைவுகூரத்தக்கதாகும்.

நமது தாயகத்தின் மையப் பிரதேசங்களிலும் நகரங்களிலும் நடைபெறும் அரசியல் விவகாரங்கள் எவ்வாறு சர்வதேச அரசியலில் எதிரொலிக்கின்றனவோ, அதேபோல் எல்லையோர மக்களின் வாழ்வும் தேசத் தின் அரசியலில் ஒன்று கலந்து வெளிப்பட வேண்டும்.

எல்லையோரங்களில் அன்றாடம் உணவிற்காகவும் உயிருக்காககவும் போராடியபடி வாழும் நமது தேசத்தின் விளிம்புநிலை மக்களின் வாழ்வை சிலர் தேர்தல் அரசியலாக்க முயல்கின்றனர். இம்மக்கள் தேர்தலில் வாக்களிக்கா நிலைமை உருவாகியிருப்பது பற்றி தம் கேவலமான கரிசனையை வெளிப்படுத்தும் இந்த துரோகத்தனங்கள் நமது மக்களுக்கு விளங்காமலில்லை.

## மூதூர் தாக்குதல்

முன்னாள் பொலீஸ் அதிகாரியாக இருந்து சிறிலங்கா முஸ்லீம்கொங்கிரஸ் வேட்பாளராக மாறிய உபைதுல்லா என்பவர் மீது அண்மையில் மூதூரில் நடைபெற்ற தற்கொலைத்தாக்குதலும், இதில் கூடவே முஸ்லீம்மாணவர்கள் ஆசிரியர்கள் அடங்கலாக, பல முஸ்லீம் மக்களின் கொலைகளும் மக்கள் மத்தியில் பல்வேறு கேள்விகளை ஏற்படுத்தியுள்ளது. தவிர, அப்பிரதேசத்தில் கொந்தளிப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது.

பொலீஸ்அதிகாரியாக மட்டுமன்றி உளவுத்துறையாகவும் செயற்பட்டு, பல போராளிகளையும் தமிழ் மக்களையும் வேட்டியாடி, பலரை சந்தேகத்தில் கைது செய்து வதைத்தில் நேரடியாக ஈடுபட்ட உபைதுல்லா தமிழீழ விடுதலைப் போராட்டதைப் பொறுத்தவரையில் எதிரி என்பதும் அவர் விடுதலைப்புலிகளால் தாக்குதல் இலக்காக்கப்படுவதிலும் கேள்வியில்லை. எனினும் இப்படிப்பட்ட தாக்குதலில் இருபதுக்கு மேற்பட்ட சாதாரண முஸ்லீம் மக்கள் பலியானது ஒரு சாதாரணவிடயமல்ல.

உபைதுல்லா, இவர் ஈழப்போராட்டத்தின் எதிரி. ஒரு இராணுவ இலக்கு என்பதில் ஐயமில்லை. ஆனாலும் ஒரு இலக்கானது எத்தனை முக்கியமானது, அதனை என்னவிதத்தில் எதிர்கொள்வது, அதனால் ஏற்படும் அரசியல் சாதகபாதகங்கள் என்ன? நமது விடுதலைப் போராட்டத்தின் இன்றைய வளர்ச்சிக்கட்டம் என்ன? போன்ற விடயங்களில், தீர்க்கமான ஒரு கட்டத்தில் இறுதி வெற்றிக்காக போராடிக் கொண்டிருக்கும் ஒரு விடுதலை இயக்கம் அவசியம் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

அடக்கப்படும் இரண்டு தேசங்களுக்கிடையில் ஆரோக்கியமான உறவுகளை ஏற்படுத்தி நமது போராட்டத்தினை காத்திரமாக்க வேண்டிய தருணத்தில் பல முஸ்லீம் பொதுமக்கள் கொல்லப்படவும் பலர் காயப்படவும் காரணமான இந்த தாக்குதலும் அது செய்யப்பட்ட விதமும் கண்டிக்கப்பட வேண்டியது என்பதுடன் சகதேசத்தின் நலன்பாற்பட்டும், நமது விடுதலைப் போராட்டத்தின் நலன்பாற்பட்டு விசனப்பட வேண்டியதுமாகும். இதனை விட முஸ்லீம் மக்களின் முக்கிய பாடசாலையொன்றிலுள்ள கணணிகளை எடுத்துச்சென்றுள்ளதும் கொந்தளிப்பை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது.

நமது தேசமும், விடுதலைப்புலிகளும் இன்று எதிரிப்படைகளையே நம் மண்ணைவிட்டுத் துடைத்தெறியும் அளவிற்கு வளர்ந்துள்ள நிலைமையுடன் ஒப்பிட்டால், மேற்படி தாக்குதல்களின் அரசியல் பயன்பாடு அர்த்தமற்றது மட்டுமல்ல, போராட்டத்திற்கு எதிர்விளைவுகளை அதிகமாக ஏற்படுத்துவதுமாகும். இவ்வாறாக, விடுதலைப் புலிகள் அமைப்பானது, அரசியல் தீர்க்கதரிசனமற்று செயற்படுவது, அவ்வமைப்பின் எதேச்சாதிகார குணாம்சத்தை மாத்திரமல்ல, ஆக்கிரமிப்பு தமிழ் இனவாதிக்க பண்பையும் எடுத்துக்காட்டுகின்றது. இது ஈழத்தமிழர் அனைவரையும் வெட்கப்படச் செய்கின்றது.

**எமது இலட்சியம் சுதந்திர தமிழீழம்**

www.tamilarangam.net

# நண்பர்களும் எதிரிகளும்

85 இல் எழுச்சி பெற்று வந்த முஸ்லீம் தேசிய இயக்கமானது, 1987ம் ஆண்டிலும் அடுத்து வந்த ஆண்டுகளில் கூர்மையடைந்தது. பிரதானமாக, இந்திய படைகளின் தயவில் தமிழ் அமைப்புகள் மேற்கொண்ட அழிவு நடவடிக்கைகள் காரணமாக இது நிகழ்ந்தது. உண்மையில் முஸ்லீம் மக்களின் தேசிய எழுச்சியை கருவிலேயே நசுக்கிவிட இந்திய மத்திய அரசு ஒரு இரகசிய நிகழ்ச்சி நிரலின்கீழ் செயற்பட்டது என்பது எவராலும் கவனிக்கப்படவில்லை. இந்திய மத்திய அரசானது, சிறிலங்கா அரசுடன் இணைந்து திணித்த ஒப்பந்தமானது வடக்கு கிழக்கு முஸ்லீம் மக்களின் தேசிய அபிலாசைகள் பற்றி எந்தவொரு வார்த்தையும் கொண்டிருக்கவில்லை என்பது தற்செயலல்ல. இதில் இரண்டு ஆதிக்க அரசுகளும் ஒத்த நிலைப்பாட்டில் இருந்தன.

இந்திய மத்திய அரசு ஆதரிப்பாக காட்டிக்கொண்ட திம்புக்கோரிக்கைகளிலும் சரி, பலவந்தமாக திணிக்கப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்திலும் சரி, இன்றைய பேச்சுவார்த்தை முயற்சிகளாயினும் சரி, இவ்விரு அரசுகளும் முஸ்லீம் மக்களின் தேசிய அபிலாசைகளை திட்டமிட்டே தவிர்த்து வந்துள்ளன. ஈழத்தமிழரின் அனைத்து உரிமைகளையும் இந்திய மத்திய அரசு பெற்றுத்தரும் என அன்று ஏமாந்திருந்த தமிழ் அமைப்புகளும் கூட முஸ்லீம் மக்கள் முற்றிலுமாக புறக்கணிக்கப்பட்ட இவ்விடயத்தில் அசாதாரண மௌனமே சாதித்தன. சமயங்களில் எதிர்த்தும் நின்றன. இதன் மூலமாக, தமது முஸ்லீம்விரோத உள்ளக்கிடக்கையை வெளிக்காட்டிக்கொண்டன.

ஒரு கட்டத்தில் இவ்விரு அரசுகளும் தமிழ், முஸ்லீம் தேசங்களுக்கிடையில் பகைமை உணர்வுகளையும், காழ்ப்புகளையும் உருவாக்கிட திட்டமிட்டுச் செயற்பட்டன என்பதற்கு ஏராளம் சான்றுகள் உள்ளன.

ஒரு புறம் இது நிகழ, மறுபுறம், இந்திய ஆக்கிரமிப்புக் காலங்களில், ஈழத்தமிழரின் தேசிய அபிலாசைகளில் உறுதியாக நின்றிருந்த விடுதலைப்புலிகள் அமைப்பும், முஸ்லீம் மக்களின் தேசிய அபிலாசைகளுக்கு குரல் கொடுத்து வந்த முஸ்லீம் ஐக்கிய விடுதலை முன்னணி என்ற அமைப்பும் 17 அம்ச கோரிக்கைகளின் கீழ் ஐக்கியப்பட்டமை யதார்த்த அவசியத்தை நிருபித்து நின்றது. இந்தியப்படையின் ஆக்கிரமிப்பிற்கும், சிறிலங்கா அரசின் இனவாதத்திற்கும் எதிரான இந்த யதார்த்தமான ஒருமைச்செயற்பாட்டை அரசியல் தீர்க்கதரிசனம் இன்றியும் தமிழினவாத ஆதிக்க வழிப்பட்டும் விடுதலைப்புலிகள் சிதைத்தும், அடுத்தடுத்து முஸ்லீம் மக்கள் மீதான படுகொலைகளை கட்டவிழ்த்துவிட்டமையும் ஆழமான வரலாற்று வடுவாக அமைந்தது.

இருந்தும், வரலாறானது உண்மையான எதிரிகள் யார் நண்பர்கள் யார் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்தியே வருகின்றது. ஈழத்தமிழர் தேசிய இயக்கத்திற்கும் முஸ்லீம்களின் தேசிய இயக்கத்திற்கும் சிறிலங்கா அரசும், இந்திய மத்திய அரசும் பொது எதிரிகள் என்பது வரலாற்று நிகழ்வுகளூடாக தெள்ளத்தெளிவாகி நிற்கின்றது. நாம் அனைவரும் தொட்டுணரும் விதத்தில் எண்ணற்ற நிருபணங்களை நமக்குத்தந்துள்ளது.

எதிரிகளை எதிரிகளாகவும் நண்பர்களை நண்பர்களாகவும் தெளிவாக இனங்கண்டுவிட்டால், நடைமுறைச் செயற்பாடுகளில் இந்த உண்மையை நாம் நிரூபித்தாக வேண்டும். பட்டும்படாத கூற்றுக்களாகவும், அழைப்புக்களாகவும் இன்றி ஆழமான செயற்பாடுகளின் மூலமாக அசைக்க முடியா நெருக்கத்தை நமக்குள் உருவாக்கிட வேண்டும். சகதேசத்தின் தனித்துவத்தை மதித்து ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒரு சகதேசம் என்ன சூழலில் சில குறிப்பான நிலைப்பாடுகளை மேற்கொள்கின்றது என்பதை நமது விருப்பில் அன்றி யதார்த்தநிலைமையில் இருந்து மதிப்பிட வேண்டும். அச்சூழலை உருவாக்கியதில் நமது பாத்திரம் கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டும். பரஸ்பரம் இழைக்கப்பட்ட தவறுகள் ஒப்புக்கொள்ளப்பட வேண்டும். முழுமையான நிவாரணங்கள் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு தரப்பட வேண்டும். இப்படியான பாரதூரமான தவறுகள் எதிர்காலத்தில் இழைக்கப்பட மாட்டாது என்ற உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். எந்த பிரச்சனையாயினும் நியாயமான உளப்பூர்வமான உரையாடல் மூலம் தீர்க்கப்பட வழிமுறைகள் திறந்திருக்க வேண்டும். அரசியல் மற்றும் அனைத்து அம்சங்களிலும் சமத்தவம் பேணப்பட வேண்டும். இந்த திசையில் ஈழத்தமிழ் தேசிய இயக்கமானது அதிகம் சாதிக்க வேண்டியுள்ளது. வெறுமனே இது விடுதலைப்புலிகளின் கடப்பாடு மட்டும் அல்ல, இது ஈழத்தமிழர் அனைவரதும் கடப்பாடாகும். சிறு சிறு சமூக அமைப்புகள் சமய நிறுவனங்கள், வெகுசன அமைப்புகள் தொடக்கம் திட்டவட்டமான அரசியல் நிறுவனங்கள்வரை இந்த நடைமுறை முயற்சியில் இறங்க வேண்டும். ஆழமானதும் பரந்ததுமான பிரச்சனைகள் என்பதால் அதற்குரிய கடினஉழைப்பும் பொறுமையும் நாம் வெளிப்படுத்தியே ஆகவேண்டும்.

தூர இருந்து சிறிலங்கா அரசைப் பகிரங்கமாக பலப்படுத்தும் பாகிஸ்தானிய அரசாயினும், ஈழத்தமிழருடன் கூட இருப்பதாக காட்டி குழிபறிக்கும் இந்திய மத்திய அரசாயினும் ஈழத்தமிழரின் தேசிய இயக்கத்திற்கும் முஸ்லீம்களின் தேசிய இயக்கத்தற்கும் எதிரான சக்திகளே. இவையிரண்டுமே சிறிலங்கா இனவாத அரசைத் தொடர்ந்தும் பலப்படுத்தி வருகின்றன. ஈழத்தமிழருக்கு இந்திய அரசும் முஸ்லீம்களுக்கு பாகிஸ்தானும் ஆதரவு போன்ற மாயைகளையும் ஐதீகங்களையும் கண்டு ஏமாறலாகாது.

ஆண்டாண்டு காலமாக அடக்கப்பட்டு வரும் இரு தேசங்களும் தமக்கிடையில் சமத்துவமான அரசியல் உறவுகளை அனைத்துத்தளங்களிலும் உருவாக்குவோம். நட்புச்சக்திகள் தமக்கிடையில் கைகோர்க்குமாறு அன்றாடம் யதார்த்தமானது நிர்ப்பந்திக்கும்போது, என்ன காரணத்திற்காகவும் இதனை நாம் தாமதிப்பதானது பாரிய அரசியல் தவறுகளுக்கு இட்டுச்செல்லும். எனவே இரு தேசங்களின் சார்பிலும் இந்த அவசர கடமையுணர்ந்து செயற்படுவோம். இதில் முன்கையெடுக்கும் கடப்பாடு ஈழத்தமிழராகிய நமக்கு அதிகமுள்ளது.

தருமு

## அழித்தொழிப்பு யுத்தம்... (முதலாம் ஆம் பக்க தொடர்ச்சி...)

நசுக்குவது என்றாகிவிட்டது. சிங்கள அரசுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையிலான வெளி வெகுவேகமாக அருகிவருகின்றது.

முடிவற்ற யுத்தமும் நமது தேசத்தை அழித்தொழிப்பு செய்வதும் சந்திரிகா தரப்பின் பிரதான நிகழ்ச்சி நிரல் எனின், அமையப்போகும் தேசிய அரசாங்கத்தில் கொலுவிருக்கப்போவதும், சோவினிஸ்ட்டுக்கள் குழுமம்தான் தான் என்பதில் சந்தேகமில்லை. இனிவரும், தமிழின அழிப்புப்போருக்கு ஆளணி திரட்டிக்கொடுக்கும் சக்திகள்தான் இத்தேசியஅரசாங்கம் என்ற அதிகாரத்தில் வீற்றிருக்கப்போகின்றன. பிக்குமாரின் சாணக்கிய வழிகாட்டல், ரத்னசிறி போன்ற தளபதிகளின் சபதங்கள், சிகள உறுமய, பூமிபுத்ர, தினேஷ் போன்ற தீவிர இனவாதிக ளின் பக்கபலத்துடன் நம்மீதான அழித்தொழிப்பு யுத்தம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய அரசாங்கம் என்ற ஜனநாயக தோற்றப்பாடானது, மிகவும் கொடுரமாக மேற்கொள்ளப் படவிருக்கும் அழித்தொழிப்பு யுத்தத்திற்கான கச்சிதமான கவசமாகவும் அமையப்போகின்றது.

விடுதலைப்புலிகளை அழித்தொழிக்கும் ரத்னசிறியின் முழக்கம், விடுதலைப்போருக்கு நம்புலம்பெயர் மக்கள் தரும் நிதிப்பங்களிப்பை முடக்கவும், புலிகளை தடைசெய்யவும் கதிர்காமர் காட்டும் தீவிரம். சிகள உறுமயவின் ஐரோப்பிய சுற்றுப்பயணமும் நம் விடுதலைப் போராட்டத்திற்கெதிரான பிரச்சாரங்களும், பிக்குமாருக்கு அரசு வழங்கியுள்ள வீட்டோ அதிகாரங்கள். வாங்கிக் குவிக்கப்பட்டுள்ள போராயுதங்கள் யாவும் அழித்தொழிப்பு யுத்தத்திற்கான முன்தயாரிப்புகளாகும்.

எனவே, இந்த ஆபத்தை எதிர்கொண்டு முறியடிக்க நமது தேசம் தன் பலமனைத்தையும் திரட்டிக்கொள்ளும் நேரம் வந்துவிட்டதென்பது மீளவும் உறுதிப்படுத்துகின்றது. நம்தாயகத்திலிருந்து ஆக்கிரமிப்புப்படைகள் எவ்வளவு விரைவில் விரட்டியடிக்கப்படுகின்றதோ, அவ்வளவிற்கு நமது தேசத்தின் இழப்புகள் குறைக்கப்படும். வெற்றியானது விரைவுபடுத்தப்படும். எவ்வளவு விரைவில் நமது உட்சபட்ச, அரசியல் மற்றும் இராணுவ பலத்தை நாம் திரட்டிக்கொள்கின்றோமோ, அவ்வளவுக்கு எதிரிகள் விரட்டியடிக்கப்படுவதும் விரைவுபடுத்தப்படும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முஸ்லிம் தேசம்: வடக்கில் இருப்பறுக்கப்பட்ட 10வது வருடம்

*1948 இல்........*

*சியோனிசப் படைகள் பாலஸ்தீன மண்ணில் அத்துமீறிப் புகுந்தன. மண்ணின் மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். தலைமுறை தலைமுறையாக தமது இனம் வாழ்ந்துவரும் தமது தாயகப் பிரதேசத்திலிருந்து பலவந்தமாக துரத்தியடிக்கப்பட்டனர். சியோனிச ஆட்சி பாலஸ்தீன மண்ணில் நிறுவப்பட்டது.*

அநாதரவுற்றவர்களாக, அகதிகளாக அண்டை நாடுகளில் மக்கள் தமது உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக தஞ்சமடைந்தனர். "அகதி தேசம்" எனும் அடையாளப் பெயர் பாலஸ்தீனியர் மீது திணிக்கப்பட்டது.

ஒரு தேசம் முற்றுமுழுதாக தனது தாயகத்திலிருந்து வேரோடு அகழ்ந்து எறியப்பட்டது.

இதயமுள்ள மானுட உலகம் இந்தக் கொடுமையைக் கண்டு கண்ணீர் வடித்தது. கொதித்தெழுந்தது. பாலஸ்தீனருக்காக நீதி கோரும் குரல்கள் உலகின் அனைத்துப் பாகங்களிலுமிருந்தும் ஒலிக்கத் தொடங்கின. இத்தகையதொரு வன்கொடுமை இனி உலகில் நிகழவேக் கூடாது எனும் உறுதிப்பாட்டை விடுதலையுணர்வுடைய மக்கள் சமூகங்கள் தமக்குள் கட்டமைத்துக் கொண்டனர்.

தமது தாயகத்தின் மீதான தமது உரிமையை நிலைநாட்டிட வீறுகொண்டெழுந்த பாலஸ்தீனியரின் விடுதலைப் போராட்டம் உலகின் விடுதலைப் போராட்டங்களுக் கெல்லாம் விடிவெள்ளியாகியது. சியோனிசத்திற்கு எதிரான பாலஸ்தீனியரின் வீரமிகுப் போராட்டம் நமது தேசத்திற்கும் ஆதர்ஷமாகத் திகழ்ந்தது.

மாபெரும் பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தின் அனுபவங்களிலிருந்தும் படிப்பினைகளிலிருந்தும் விடுதலையின் நம்பிக்கைச் சுடரொளியை உள்வாங்கி வளர்ச்சி பெற்றது தமிழீழ விடுதலைப் போராட்டம். விடுதலைப் போராட்டத்தின் சாதகமான பக்கங்களைப் போன்றே ஆக்கிரமிப்பின் பாதகங்களையும் நாம் அனுபவ ரீதியாக அறிந்திருந்தோம். "நன்மை", "தீமை" உணர்த்தும் உலக அனுபவங்கள் நம்முன் கடலென விரிந்தேயிருந்தன.

எனினும், *1990 இல்:*

'உலக மானுட ஆன்மா' எதை வெறுத்ததோ, எந்த பாதகம் நடைபெறக் கூடாதென மனித குலம் தவிப்புடன் அவாக் கொண்டுள்ளதோ அப்பாதகத்தை விடுதலைப் போரில் ஈடுபட்டிருக்கும் தேசத்தினரான நாமே செய்யத் துணிந்தோம்.

ஆம்! 1990ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் அனுபவமிக்க தலைமையான விடுதலைப் புலிகள் இரண்டே இரண்டு மணித்தியாலக் கெடுவில் முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் சொந்தமான தமிழீழ மண்ணிலிருந்து முஸ்லிம் மக்களை அப்புறப்படுத்தி இனச்சுத்திகரிப்பு செய்தனர்.

முஸ்லிம் மக்களை தமது தாய் மண்ணுடன் பிணைத்திருந்த உறவு நமது போராட்டத் தலைமையான விடுதலைப் புலிகளால் அறுத்தெறியப்பட்ட துரோகத்தனம் நடைபெற்று 10 வருடங்களாகின்றன. இந்த ஆக்கிரமிப்பு நடைபெற்ற போது நாமோ தேசமாக அதை எதிர்த்துக் குரல் கொடுக்காது மௌனித்திருந்தோம். அவ்வகையில் ஈழத்தமிழர்களான நாமனைவருமே இந்த பாதகத்திற்கு பொறுப்பேற்க வேண்டியவர்களாவோம்.

விடுதலைக்காக போராடிக் கொண்டிருக்கும் ஒரு தேசம் எனும் வகையில் இது நமது தரப்பிற்கு மிகவும் துரப்பாக்கியகரமான நிகழ்வாயுள்ளது. சக தேசங்களின் உரிமைகளில் நாம் வெளிப்படுத்தும் ஆழ்ந்த அக்கறைதான் நமது விடுதலைக்கும் வலுச் சேர்க்கிறது. எனினும் நாமோ, இன்று முஸ்லிம் தேசத்தின் முதன்மை அடக்குமுறையாளர்களாக மாறியுள்ளோம்.

நம்மீது படிந்துள்ள இந்த வரலாற்றுக்கறையை கழுவ வேண்டியவர்களும் நாமே. முஸ்லிம் தேசத்திற்கு நாமிழைத்துள்ள தவறுகளுக்காக பகிரங்க மன்னிப்பு கோருவோம். தவறுகளைத் திருத்தி புதிய உறவைக் கட்டியெழுப்ப உறுதிபூணுவோம். முஸ்லிம் மக்கள் தமது தாயகப் பிரதேசத்தில் தமது அரசியல் சுயாதீனத்துடன் வாழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்குவது தமிழர்களான நமதும், போராட்டத்தலைமையாகிய விடுதலைப் புலிகளினதும் கடமையாகும். இத்தகைய சூழ்நிலையை உருவாக்குவதன் மூலமே முஸ்லிம் தேசத்துடனான நல்லுறவுக்கு அடித்தளமிட முடியும்.

- சுபத்திரா

# ஒக்டோபர் புரட்சியை நினைவு கூர்வோம்!

1917 ஒக்டோபர் 17ம் நாள் மனிதகுல வரலாற்றில் அதுவரையில் அறியப்படாத ஒன்று நிகழ்ந்தேறியது. ஆண்டாண்டு காலமாக சுரண்டலுக்கும் அடக்குமுறைக்கும் உள்ளாகி வந்த மக்கள்திரள் ரஷ்ய நாட்டில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றியது. உழைக்கும் மக்களின் ஆட்சி ஸ்தாபிக்கப்பட்ட அந்தநாள் உலகெங்கிலும் வாழும் உழைப்பாளி மக்களாலும் புரட்சிகர ஆர்வலர்களாலும் "ஒக்டோபர் புரட்சி" என பெருமதிப்புடன் நினைவு கூரப்பட்டு வருகின்றது.

ஒக்டோபர் புரட்சியானது, சுரண்டலுக்கு உள்ளாகிடும் உழைப்பாளி மக்கள் தமக்கான அரசை உருவாக்கிட முடியும் எனும் நம்பிக்கையை உலகெங்குமுள்ள அடக்கப்பட்ட மக்கள் மத்தியில் விதைத்ததெனும் வகையில், நவீன அரசியல் வரலாற்றில் அழியா இடத்தைப் பெற்றுள்ளது.

அன்றைய கட்டத்தில் ரஷ்ய சமூகத்தில் வளர்ச்சி பெற்றிருந்த தொழிற்துறை உழைக்கும் வர்க்கமானது முதலாளித்துவத்தால் மிக மோசமான அடக்குமுறைக்கு உள்ளாகி வந்தது. அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதன் மூலம் முதலாளித்துவ சுரண்டலிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதொன்றே இந்த வர்க்கத்தின் முன்னிருந்த ஒரே தெரிவாகும்.

தொழிற்துறை உழைக்கும் வர்க்கத்தைப்போன்றே, மிக மோசமான சமூக பொருளாதார அடக்குமுறைகளை எதிர்கொண்டதுடன் கவனிப்பாரற்ற நிலையில் விடப்பட்டிருந்த பெருமளவான வறிய விவசாய மக்கள் அந்நாட்டிலிருந்தனர். இவர்களைவிட பல்வேறு தொழில்களிலும் ஈடுபட்டுவந்த அடக்கப்பட்ட சுரண்டலுக்குள்ளாகும் வர்க்கப்பிரிவினருக்கும், வேலையில்லாதிருந்த இலட்சக்கணக்கான மக்களுக்கும், சமூக சக்திகளுக்கும் சமூக விடுதலை தேவைப்பட்டது.

மறுபுறம், வறிய விவசாயிகள், உழைப்பாளிகள், வேலையில்லாதோரின் மத்தியிலிருந்து கட்டாய இராணுவச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த படையினர் இருந்தனர். தொடர்ச்சியான ஆக்கிரமிப்பு யுத்தங்களில் ஈடுபட்டு தோல்விக்குமேல் தோல்வியைத்தழுவி உளத்திடம் வீழ்ச்சியுற்றவர்களாய், ஜார் ஆட்சியின் அதிகார முறைமைகளினாலும் நெருக்குதல்களினாலும் துன்புறுத்தல்களுக்குள்ளாகிகளைத்துப்போயிருந்தனர். இவர்களும் இந்த அதிகாரத்துவ முறைமைக்குள்ளிருந்து தம்மை விடுவித்துக் கொண்டு சுதந்திர மனிதர்களாய் வாழ அவாக் கொண்டிருந்தனர்.

புரட்சிகர அரசியல் உணர்வில் மிக முன்னேறிய பிரிவாக இருந்த தொழிலாளி வர்க்கம் அடக்கப்பட்ட மக்கள் பிரிவினர் அனைவரையும் தனது தலைமையில் ஓரணிதிரட்டி புரட்சிக்கு தலைமை தாங்கியது. சோசலிச சமூக அமைப்பை நிர்மாணிப்பதை உடனடி இலக்காகக் கொண்டு தனது புரட்சிகர அதிகாரத்தை நிலைநாட்டியது.

உலகைக் குலுக்கிய இந்தப் புரட்சியின் வெற்றியிலிருந்து, விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் மக்களான நாம் கற்றுக்கொள்வதற்கான விடயங்கள் நிறையவே உள்ளன. அதேபோல் அதன் வீழ்ச்சியிலிருந்தும் நாம் கற்பதற்கான படிப்பினைகள் ஏராளம்.

சோவியத் குடியரசின் வீழ்ச்சியினால் சோசலிசத்திலேயே நம்பிக்கையிழந்துவிட்ட பலரை நமது சமூகத்திலேயே காண முடிகிறது. சோவியத் அரசின் வீழ்ச்சி என்பது சோசலிசத்தின் வீழ்ச்சி அல்ல. அது தவறான சோசலிச நிர்மாண முறைகளினாலும், கட்சி அதிகாரத்துவ முறைமைகளினாலும், தவறான தேசியக் கொள்கையினாலும், சமூக சக்திகளை புரிந்து கொள்ளாததினாலும் ஏற்பட்ட தோல்வியாகும். சோசலிசம் என்பது ஒரு சமூக, பொருளாதார வாழ்வியல் முறைமை. அது புதிய சமூக சூழல்களுக்கு ஏற்ப வளர்த்தெடுத்துச் செல்லப்பட வேண்டிய ஒன்று.

ஒக்டோபர் புரட்சியின் இந்த 83வது நிறைவு தினத்தில், தமிழீழத்தின் அடக்கப்பட்ட மக்கள்பிரிவினரான நாம், மார்க்சிய புரட்சிகர கொள்கையின் வெளிச்சத்தில் சோசலிச தமிழீழத்தைக்கட்டியெழுப்ப அடித்தளமிடுவோமென உறுதியேற்போம்.

- சியா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழீழ மக்கள் குடியரசின் அடிப்படை பிரிவினர்கள்: 2

# விவசாயிகள்

நமதுதேசத்தின் முதுகெலும்பாக, உயிர்ச்சாரமாக நமது விவசாயி கள் திகழ்கின்றார்கள். எண்ணி க்கை ரீதியில் நமது சமூகத்தில் எண்பது வீதத்திற்கும் அதிகமான வர்களாக விவசாயிகள் அமைகி ன்றார்கள். தென்தமிழீழம் தொடங்கி வடதமிழீழம் ஈறாக, எங்கும் விவசாயிகளின் அடர்த் தியை கொண்ட தனித்துவமான மக்கள் சமூகமாக நமதுதேசம் விளங்குகின்றது. நமது தேசத் தின் பொருளாதார அடித்தளமாக வும் கலாச்சார விளைநிலமாக வும் மட்டுமன்றி, நமதுதேசத்தின் முதன்மையான போராட்ட ஆன்மாவாகவும் விவசாயிகள் விளங்குகின்றாகள்.

நமதுதேசத்தின் பொருளாதாரம் விவசாயத்திலேயே வேர் கொண் டுள்ளது - எப்போதும். ஐரோப் பிய ஆக்கிரமிப்புக்கு முன்னர், விவசாயமானது, நமது மக்களின் சுயதேவையை பூர்த்தி செய்கின்ற பிரதான உற்பத்தி முறையாக விளங்கியதோடு, ஏற்றுமதிக கான மூலங்களின் ஒன்றாகவும் அமைந்திருந்தது. வேறுபட்ட நிலஅமைப்பு, நீர்வளம் என்பவ ற்றை பெற்றிருக்கின்ற போதிலும், அத்தகைய சூழலுக்கேற்ப தமது உற்பத்தி முறைகளையும் அறிவையும் நமது விவசாயிகள் தமது மரபுரிமையாக பெற்றிருக்கின்றார்கள்.

தென்தமிழீழமானது, நெற்செய் கைக்கும் கால்நடை வளர்ப்புக் கும் ஏற்ற சிறந்த நிலஅமைப்பை யும் நீர்வளத்தையும் கொண்டிருக் கின்றது. மத்திய தமிழீழமானது, வானம் பார்த்த பூமியாக இருக்கி ன்ற போதிலும், அருமையான செம்பாட்டு மண்ணை கொண்டா தாக, நெற்செய்கை சிறுபயிர்ச் செய்கை என்பவற்றோடு, கால் நடை வளர்ப்புக்கும் உகந்த நில மாக அது இருக்கின்றது. வடதமி ழீழம் சுற்றிலும் கடலால் சூழப்ப ட்டிருக்கின்ற ஒரு தீபகற்பமாக அமைந்திருக்கின்ற அதே நேரத் தில், அதன் வளமிக்க மண்ணும் ஆழ்கிணற்று நீரின் மூலமான பாசன முறையும் சந்தை பயிர்ச் செய்கைக்கு ஏற்ற தன்மையை பெற்றிருக்கின்றன. இம் மூன்று வேறுபட்ட பிரதேசங்களிலும் வாழ்ந்து வருகின்ற நமது விவசா யிகள், தமது கடின உழைப்பா லும் பாரம்பரிய அறிவினாலும் தமது மண்ணை ஒரு சிறந்த விவ சாய பூமியாக தொடர்ச்சியாக பேணி வந்திருக்கின்றார்கள்.

நமதுதேசத்தின் கலாச்சார கூறுகளில் அனேமானவை, நமது விவசாய மக்களிடமிருந்தே பிறந்திருக்கின்றன. செழுமைமி க்க கூத்து நாட்டியங்கள், நாட்டார் பாடல்கள் என்பவை தொடங்கி, நிறுவன வடிவம் கொண்டு இயங்குகின்ற பரதநா ட்டியம் வரை விவசாய மக்களின் வாழ்வினூடாக உருவான கலை வடிவங்கள், நமதுதேசத்தின் பெருமைமிகு கலாச்சார மரபுக



ளாக திகழ்கின்றன. விவசாய மக்களினால் கொண்டாடப்பு கின்ற உழவர் பண்டிகை, நிலத் தின் மீதும் கால்நடைகளின் மீதும் அவர்கள் கொண்டிருக்கின்ற ஆழ்ந்த நேசத்தினதும் அக்கறை யினதும் வெளிப்பாடாகவும் நமதுதேசத்தின் கலாச்சார அம்சங்களில் ஒன்றாகவும் விளங்குகின்றது.

நூற்றாண்டுகளாக, தமது நிலத்தில், தமக்கேயுரிய தனித்துவங்களோடு, வாழ்ந்து வந்த நமது விவசாயிகளை, முன்னூறு வருடங்களுக்கும் கூடுதலான ஐரோப்பிய ஆக்கிர மிப்பு கூட அதிகம் பாதிக்கவி ல்லை. ஆனால் சிறிலங்கா அரசு உருவாக்கப்பட்ட ஆரம்ப கணத் திலிருந்தே, நமது விவசாயிக ளின் வாழ்வு முற்றாக மாற்றப்பட்டு விட்டது. தமது நிலத்தின் மீதும் உற்பத்தியின் மீதும் தமது வாழ்வின் மீதும் நமது விவசாயிகளுக்குள்ள உரிமை, சிறிலங்கா அரசினால் முற்றாக பறிக்கப்பட்டு விட்டது. திட்டமி ட்ட சிங்கள குடியேற்றங்களி னால், நமது விவசாயிகளின் உற்பத்தி நிலங்களும் மேய்ச்சல் நிலங்களும் அவர்களிடமிருந்து அபகரிக்கப்பட்டுள்ளன. தாம் பண்படுத்தி, வளப்படுத்திய தமது நிலங்களிலிருந்தும் தமது வாழ்விடங்களிலிருந்தும் அவர்கள் வெளியேற்றப்பட்டுள் ளார்கள். தமது சொந்த நிலத்திலேயே, சிறிலங்கா படைகளின் ஆக்கிரமிப்பின் கீழும் அகதிகளாகவும் வாழ்கின்ற அவமானமிக்க நிலைக்கு நமது விவசாயிகள் ஆளாக்கப்பட்டுள்ளார்கள். தமது உழைப்பின் மூலம் சுயதே வையை பூர்த்தி செய்ய கூடியவர்க ளாக இருந்த நமது விவசாயிகள் இப்போது தமது ஒருநேர உணவு க்கு கூட, நிட்சய உறுதியற்றவர் களாக மாற்றப்பட்டிருக்கின் றார்கள். அவர்களது கலாச்சார நடவடிக்கைகள் மோசமாக சீர்கு லைக்கப்பட்டுள்ளன. நமது தேச த்தின் மீது திணிக்கப்பட்டுள்ள யுத்தமும் அடக்குமுறையும் வறு மையும் விவசாயிகளின் இயல் பான கலாச்சார வளர்ச்சியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளன.

எனினும் இவை எதுவும் நமது விவசாய மக்களை செயலிழக்க செய்யவில்லை, அவர்களை பலவீனமாக்கி விடவுமில்லை. மாறாக, சிறிலங்கா அரசின் அக்கிரமிப்பும் அடக்குமுறையும் நமது விவசாயிகளை தணியா விடுதலை வேட்கையுடன் திரண் டெழச் செய்துள்ளன. ஐம்பது ஆண்டுகள் என்ற குறுகிய காலத்திற்குள், சிறிலங்கா அரசினால் நமது விவசாயிகளு க்கு ஏற்பட்டுள்ள அழிவுகளும் சீர்குலைவுகளும் துயரங்களும், நமது மண்ணில் மாபெரும் தேசிய விடுதலை போராட்டம் வெடித்து கிளம்புவதற்கான உந்து விசைக ளில் ஒன்றாக அமைந்துள்ளன, நமது விடுதலை போராட்டத்தை தாங்கி நிற்பவர்களாகவும் அதன் உயிராற்றலாகவும் அது தொடர்ந்தும் வீரியத்துடன் முன் னெடுக்கப்படுவதற்கான மனிதவளத்தை வழங்குகின்ற முக்கிய பிரிவினராகவும் நமது விவசாய மக்களை மாற்றியுள் ளன. ஆம்! நமது விடுதலை போராட்டத்தின் ஆன்மா வாக நமது விவசாயிகள் மாறியிருக்கின்றார்கள்.

நமதுதேசத்தை சேர்ந்த மக்கள் பிரிவினரில், நமது மண்ணின மீதும் நமது சுயவாழ்வின் மீதும் பூரண இறைமை கொண்ட தனியான அரசின் தேவையை, மிக தீவிரமாக உணர்கின்றவர்களாக நமது விவசாயிகள் விளங்குகின்றார்கள். சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்பினாலும் இனஅடக்கு முறையினாலும் தமது வாழ்வின் அனைத்து கூறுகளும் தம்மிடமிரு ந்து பறிக்கப்பட்டும் சீர்குலைக்கப் பட்டும் உள்ள நிலையில், நமது விவசாயிகள் தமக்கான சொந்த அரசின் மீது, ஆழமான ஆர்வத் தையும் விருப்புறுதியையும் கொண்டிருக்கின்றார்கள். இத்தகைய அரசை அடைந்து கொள்வதற்காக, அவர்கள் அளப்பரிய தியாகங்களையும் அர்ப்பணிப்புகளையும் செய்து வருகின்றார்கள். யுத்த அழிவுக ளையும் துயரங்களையும் சுமைக ளையும் மாபெரும் வலிவுடன் தாங்கியவாறு, நமதுதேச விடுதலை போராட்டத்திற்கான மனித வளங்கள் உட்பட, அனைத்து வளங்களையும் வழங்கிவருவதில்

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்திய ஆக்கிரமிப்பு யுத்தம்: 13 வருடங்கள்





இந்திய ஆக்கிரமிப்புப் படையினர் தம் அமைதிப்படை வேடத்தை களைந்தெறிந்து நம் தேசத்தின் மீது யுத்தத்தை கட்டவிழ்த்துவிட்டு 13 வருடங்கள் உருண்டோடி விட்டன. நமது மண்ணில் இந்திய ஆக்கிரமிப்புப் படைக்கும் இந்திய மத்திய அரசிற்கும் கிடைத்த படுதோல்வியும் படிப்பினைகளும், உலக வரலாற்றில் அவமானகரமான தோல்வியுற்ற ஆக்கிரமிப்பு சக்திகளின் பட்டியலில் அவர்களை இடம்பெற வைத்துவிட்டது.

ஒன்ரரை இலட்சம் படைகள், கனரக ஆயுதங்கள், இடைவிடாத இரண்டு வருட அழித்தொழிப்பு நடவடிக்கைகள் எதனாலுமே அவர்களின் எண்ணத்தை ஈடேற்ற முடியவில்லை. உலகின் நான்காவது பலம்வாய்ந்த படை தலைகுனிந்தபடி தன்னிடத்தை சென்றடைந்தது.

இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை எம்மீது பலவந்தமாக திணித்த இந்திய மத்திய அரசானது, அதன்பாற்பட்ட கடப்பாட்டையும் கூட நிறைவேற்ற நினைக்கவில்லை. உடல்நலிந்து, குடல் வெந்து வீரமரணம் எய்திய திலீபனின் கொள்கை உறுதியின் பெறுமதியானது, காந்தியவழியை வருடாந்தம் கொண்டாடும் இந்திய ஆளுங்குழுமத்திற்கு ஒரு பொருட்டாக தோன்றவில்லை. குமரப்பா, புலேந்திரன் அடங்கிய 19 போராளிகளின் உயிர்களும் அவர்களுக்கு பொருட்டாகவில்லை. மிகவும் இலகுவாக தவிர்த்திருக்க வேண்டிய இழப்புகளை வேண்டுமென்றே இவர்கள் அனுமதித்தனர்.

மிராஜ் விமானங்களை அனுப்பி சிறிலங்கா அரசை மிரட்டிப்பணிய வைத்த அவர்களுக்கு இந்த போராளிகளை சிங்களப் படைகள் கடத்திச்செல்வதை மிக இலகுவாகவே தவிர்த்திருக்க முடியும். இருந்தும், அவர்கள் தவிர்க்க முயலவில்லை. காரணம் அவர்கள் ஏற்கனவே ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கு ஆயத்தமாக வந்திருந்தனர். அதற்கான வாய்ப்புக்காக காத்திருந்தனர். தமக்கு அடிபணிய மறுத்த விடுதலைப்புலிகளை பூண்டோடு அழித்துவிட கங்கணம் கட்டியிருந்தனர். தமிழீழ விடுதலையை சிதைத்திட திட்டம் செய்திருந்தனர். இந்தியப் படைகள் நம்மண்ணில் "அமைதிகாக்க" கொண்டு வந்து குவித்த போராயுதங்களின் அளவும் கனதியும் அவர்களின் நோக்கத்தை அன்றே உறுதிப்படுத்திவிட்டன.

அந்நிய ஆக்கிரமிப்பாளர்களின் கனவுகள் இறுதியில் தவிடுபொடியானது. எமது மக்களது தீரா சுதந்திர தாகம். விடுதலைப் புலிகளின் விட்டுக்கொடாத வீரஞ்செறிந்த கெரில்லா போராட்டம். திலீபன், அன்னைபூபதி போன்றவர்கள் தம்மை உருக்கி அளித்த தார்மீக பலம். தேசவிடுதலையின் உறுதியும் ஆர்வமும் கொண்ட நம் மக்கள் சக்தியின் வற்றாத பங்களிப்புகள். முஸ்லீம் மக்களும் அவர்களது அரசியல் தலைமைகளும் ஆற்றிய குறிப்பான பாத்திரங்கள். தமிழக மக்களின் ஒன்றிணைந்த உறுதியான ஆதரவு. எனப் பலகாரணங்கள் இவ்வெற்றியின் பின்னணியாகும். என்றென்றும் நினைவு கூரத்தக்க வரலாற்று நிகழ்வுகள் இவை. இப்போதும் நமது தேசிய விடுதலைப் போராட்டத்தை முறியடிக்க . . .

தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க

# முஸ்லீம் தேசம்: அவசரப்பணிகள்

80 களுக்கு முன்னர் முஸ்லீம் மக்கள் ஒரு சமூகமாக (community) அடையாளப்படுத்தப்பட்டனர். 80 களின் நடுப்பகுதியில் அது இனத்துவப் (Ethnicity) பண்புடையதாகியது. முஸ்லீம் கொங்கிரஸ் கட்சியின் தோற்றம், அதன் பலம் என்பவற்றால் இது மேலும் உறுதிப்படுகின்றது. தனித்துவமான இனத்துவப் பண்பானது திடப்பட்டு ஈற்றில் திட்டவட்டமான அரசியல் வகையினமான தேசம் (Nation) என்றாகியது. இதற்கு மேல் அதன் அரசியல் தலைவிதியை தானே நிர்ணயம் செய்யும் உரிமையுடையதாகியது.

ஒரு ஆய்வாளர் கூறுவது போல, அண்மைக் காலங்களில் பொதுசன முன்னணிக்கும் யூஎன்பிக்கும் இடைப்பட்ட அதிகாரப் போட்டா போட்டி காரணமாக குறிப்பாக வடகிழக்கு முஸ்லீம்களினதும் முஸ்லீம்கொங்கிரஸ் கட்சியினதும் முக்கியத்துவம் மேலும் அதிகரித்தது. முஸ்லீம் கொங்கிரஸ் கட்சி பெற்ற இந்த முக்கியத்துவத்தை தமிழரசுக் கட்சி 60களில் கொண்டிருந்த அரசியல் பேரம்பேசும் பண்புக்கும் அவர் ஒப்பிடுவது குறிப்பிட்டளவிற்கு சரியானதே. இருந்தும் ஒவ்வொரு தேசிய இயக்கமும் தனது சொந்த அனுபவங்களினூடாக பயணிக்கின்றது என்ற யதார்த்தை மதிப்பிட்டு, ஏற்றுக் கொண்டு, அதனதன் தனித்துவப் பண்புகளுடன் தேசங்களுக்கிடையிலான சமத்துவத்தை நாம் உறுதிப்படுத்த வேண்டும்.

முஸ்லீம்களின் தேசிய இயக்கமானது வரலாற்று அவசியத்தில் எழுந்ததாகும். தமது முன்னணி அரசியல் தலைவரை எதிர்பாராத விதத்தில் முஸ்லீம் தேசம் இழந்தாலும், உடனடியாகவோ காலம்தாழ்த்தியோ தமக்கான தலைமையை உருவாக்குவதும், சமகால அரசியல் நிகழ்வுப்போக்குகளில் பலமாக தாக்கம் செலுத்துவதும் தவிர்க்கமுடியாததாகும். அந்தவகையில், கடந்தகால அனுபவத்தில் தமது அரசியல் போராட்டத்தை நீண்ட கால நோக்கிலும் முன்னிலும் வலுமிக்கதாகவும் நடாத்தும் என்பது உறுதி.

எந்தவொரு தேசத்தினமும் தலைமையின் கடமை, அத்தேசத்தினை பிரதிநிதித்துவப்படுத்துவதாகவே இருக்கும். எவருடைய விருப்பு வெறுப்பிற்குமாக அது இருக்காது. மேலும் அவசரக்கடமையான தம்தேசத்தை திரட்டிப் பலப்படுத்துவதாகும். தம் தேசத்தின் எந்தவொரு உரிமையையும் விட்டுக்கொடாது உறுதியாக நிற்பதிலும், தமது சட்டபூர்வ தேசிய உரிமைகளை உள்ளும், உலகெங்கும் நிலைநாட்டிப் பலப்படுத்தி ஆதரவுகளைத் திரட்டுவதிலும் ஈடுபடுவதாகும். அந்தவகையில் முஸ்லீம் தேசமும் அதன் தலைமையும் தன் தேசிய அபிலாசைகளை அடைவதற்கு மேற்கொள்ளும் அயரா முயற்சியில் ஈழத்தமிழரும், அவர்கள் சார்பில் தமிழீழ மக்கள் கட்சியும் என்றும் கைகோர்த்து நிற்கும்.

எதிர்காலம் தீர்க்கமானது, தமது தேசியக் கோரிக்கைகளை உறுதியாக முன்வைத்து அடக்கப்படும் ஒவ்வொரு தேசமும் அதற்காக விட்டுக்கொடாது போராட வேண்டும். இதே சமயம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தலைமைப் பாத்திரம் ஆற்றி வரும் விடுதலைப்புலிகள் தமது ஆழ்ந்த நீடித்த மெளனத்தை களைந்து முஸ்லீம் தேசத்துடன் அரசியல் சமத்துவமிக்க ஒரு உறவினை ஏற்படுத்திப் பலப்படுத்த முன்வர வேண்டும். அதிகாரத்தையும் பலத்தையும் கொண்டு ஒரு தேசம் இன்னுமொரு தேசத்தை அடக்கி வைத்துவிட முடியாதென்பது உலகவரலாற்று அனுபவம் மட்டுமல்ல நமது சொந்த அனுபவமுமாகும்.

- விஜி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# “சட்ட விரோத” தரப்பினரின் இணைவும் புரட்சிக்கான அடித்தளமும்

ஐரோப்பியர் நம்மை ஆக்கிரமிக்கும் முன்னர், ஈழத்தமிழரான நாம் நமக்கேயுரித்தான அரசியல், நிர்வாக, பொருளாதார வாழ்வைக் கொண்டவர்களாயிருந்தோம். நமது மக்கள் தமக்குக் கிடைக்கப்பெறும் மூலவளங்களைக் கொண்டும், தமது ஆற்றலின் எல்லைக்குட்பட்டும் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். கடல்கடந்த வணிகம், உள்ளூர் பயன்பாட்டைமையப்படுத் திய மர வியாபாரம், சாராயம் வடித்தல் . . . போன்ற இன்று “தடை” செய்யப்பட்டிருக்கும் தொழில் நடவடிக்கைகள் யாவும் அன்று நமது மக்கள் சுதந்திரமாக ஈடுபட்டுவந்த சுதேசபொருளாதார நடவடிக்கைகளின் ஒரு கூறாகத் திகழ்ந்தவையே.

நம்மை பலவந்தமாக ஆக்கிரமித்த ஐரோப்பியர், அதுவும் குறிப்பாக ஒற்றையாட்சி மற்றும் திட்டமிட்ட நிர்வாக முறைமைகளுக்கு எம்மை உட்படுத்திய ஆங்கிலேயர், நமது சுதேசிய பொருளாதாரத்தை சிதைத்து அதன் மீது தமது கொலனித்துவ பொருளாதாரத்தை ஸ்தாபித்தனர். இதன் காரணமாக நமது மக்களின் வாழ்வுக்கான ஆதாரமாகத் திகழ்ந்த பெரும்பாலான பொருளாதார நடவடிக்கைகள் தேக்கமுற் றும் சிதைவுண்டும் போயின.

கடல்சார் வர்த்தகத்தையும் சாராய வியாபாரத்தையும் ஆங்கிலேயர் தமக்கு பிரதான வருவாயீட் டித்தரும் துறைகளாக தாமே மேற்கொண்டு வந்ததால் நமது மக்களால் மேற்கொண்டு வரப்பட்ட கடல் வணிகமும் சாராய உற்பத்தியும் தமக்கு போட்டியாக இருப்பதாக ஆங்கில அரசு கண்டது.

ஐரோப்பாவில் உற்பத்தியான சாராயமும் வைன் போன்ற மதுபானங்களும் உள்ளூர் சந்தையை ஆக்கிரமித்தன. உள்ளூர் உற்பத்திக்கு “கள்ளச்” சாராயம் என முத்திரை குத்தப்பட்டது. மக்கள் தமது முற்றத்திலுள்ள பனையிலும் தென்னையிலும் பாளை சீவுவதற்கும் கூட வரி விதிக்கப்பட்டது. கடல் வணிகம் சுங்க இலாகாவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. காடுகள் வனத்துறை அல்லது காட்டு இலாகா எனப்படும் அலகிடம் ஒப்படைக்கப்பட்டது. மக்கள் தமது தேவைக்காக தமது பிரதேச காடுகளில் இருந்து மரங்களை வெட்டியெடுப்பதற்கு, தமது வனவளத்தை உபயோகிப்பதற்கு கொலனித்துவ அரசு தடை விதித்தது. இதன் மறுபுறம் ஆங்கில நாட்டு பிரஜைகளுக்கும், ஆங்கிலேயரை அண்டி வாழ்ந்த உள்ளூர் ஆதிக்க பிரிவினருக்கும் உள்ளூர் மக்களின் வளங்களை சுரண்டுவதற்கு “சட்ட அங்கீகாரம்” வழங்கப்பட்டது.

காலங்காலமாக தாம் மேற்கொண்டு வந்த வாழ்க்கை முறைமைகளின் மீது தடைவிதிக்கப்பட்டதால், தமது வாழ்வைக் கொண்டு நடாத்துவதற்கு வேறு மார்க்கங்களை பெற்றிராத நிலையில் கொலனித்துவ அரசின் தடைகளையும் மீறி தமது பாரம்பரியத் தொழில்களை மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டனர்.

இவ்வாறு கடல் வணிகத்தை தொடர்ந்தவர்கள், சாராயம் வடித்தவர்கள், காடுகளில் மரங்களைத் தறித்தவர்கள் யாவரும் “சட்டவிரோத” நடவடிக்கையில் ஈடுபடுவதாக ஆங்கிலச் சட்டம் அறிவித்தது. இவர்களை வேட்டையாடி, சிறையிலடைத்து தண்டனை வழங்கியது. அத்துடன் நில்லாது “சமூக விரோதிகள்” எனும் முத்திரையையும் குத்தி சமூகத்தின் பொதுவாழ்விலிருந்தே இவர்களை ஓரங்கட்டி வைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

வட தமிழீழத்தில், கடல் வழி வணிகம் மிகவும் பிரபல்யமானதாகவும் பிரதேச பொருளாதாரத்தில் காத்திரமான பங்கு வகித்தும் வந்தது. கடல் வழி வணிகத்தில் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, காங்கேசன்துறை பிரதேசங்கள் சிறப்புற்றுத் திகழ்ந்தன. சுயாதீன கடல் வணிகத்துக்கு கொலனித் துவ அரசு தடை விதித்ததால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் இப்பிரதேசத்துக் கடலோடிகளே. “இரகசியமாக” கடல் வணிகத்தில் ஈடுபட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட இவர்கள் சுங்க இலாகாவின் துன்புறுத்தல்களுக்கு தொடர்ச்சியாக உள்ளாக நேர்ந்தது. கொலனித்துவ ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற பின்னர் அரச அதிகாரத்தைக் கைப்பற்றிய சிங்கள அரசும் ஆங்கில அரச முறைமையை அப்படியே பின்பற்றி வந்த நிலையில், தனது பங்குக்கு தமிழ்க் கடலோடிகளை மேலும் தீவிரமாக வேட்டையாடத் தொடங் கியது. இந்நிலையில், சுங்க இலாகாவினதும் கடற்கண்காணிப்புப் படையினதும் பிடியிலிருந்து தற்காத்துக் கொள்வதற்காக தம்மை ஆயுதபாணியாக்கிக் கொண்டு தொழிலை முன்னெடுக்க வேண்டிய நிலை கடலோடிகளுக்கு ஏற்பட்டது.

இப்படியாக, ஆயுதங்களையும் வெடிமருந்துகளையும் சேகரித்து பாதுகாக்கும், அவற்றைப் பிரயோகிப்பதில் பரிச்சயமுள்ளவர்களான ஒரு பிரிவினர் கடலோடிகள் மத்தியிலிருந்து உருப்பெற்றனர். ஒரு கட்டத்திற்கு மேல் சிலர் தேடப்படுபவர்களாகி முற்றிலும் தலைமறைவு வாழ்க்கை முறைமைக்குத் தள்ளப்படுகின்றனர்.

கடலோடிகளைப் போன்றே சாராயம் வடிப்போர் மற்றும் மரம் தறிப்போர் பிரிவினரிடையேயும் இத்தகைய பரிமாணங்கள் ஏற்படுகின்றன. இப்பிரிவினர் தமக்கான “சட்டவிரோத” தளங்களை ஏற்படுத்திக்கொள்ளத் தொடங்கு

தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க

## மக்கள் களம்

அன்புடையீர்,

தங்கள் பத்திரிகைக்கு அன்பளிப்பு செய்ய விரும்புகிறேன். எனினும் கடிதத்தில் பணம் வைத்து அனுப்புவது சட்டவிரோதமாம். இங்கே என்ன சட்ட விரோதம் இல்லாமல் நடந்தேறுகிறது. எனவே படிப்பதும் சட்டவிரோதமாக இருப்பின் தவறில்லை என்று நொண்டிச் சாட்டுக் கூறி திருப்திப்பட்டு கொள்ள வேண்டியது தான். தமிழீழத்தின் வரவை எதிர்பார்க்கிறேன்.

வளவன்
வவுனியா

அன்புடையீர்,

எனக்கு கிடைக்கும் பிரதியை போட்டோப் பிரதி எடுத்து ஆர்வமுள்ளவர்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். உங்கள் வெளியீடுகளைத் தொடர்ந்தும் பெறுவதற்கும் நான் ஆர்வமாயிருக்கிறேன்.

நாம் முதலில் தெளிவான சிந்தனைகளை எம்மில் ஏற்படுத்திக் கொள்வது, வளர்த்துக் கொள்வது முக்கியமானதாக இருக்கிறது. பொதுவாக எல்லாத் தரப்பிலும் வெறும் உணர்ச்சிமயமான தேசம் பற்றிய, விடுதலை பற்றிய கருத்துக்களே கோலோச்சி வந்திருக்கின்றன. அது ஏற்படுத்திய ஏற்படுத்துகிற விளைவுகள் மோசமானதென நாம் கண்டு வருகிறோம். முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரையும் ஆட்சியிலிருந்த அரசியல் உணர்ச்சிகளால் நிரம்பி வழிந்ததுதான். தனிநபரை வளர்த்து விட்டவர்கள் இப்போது தத்தளித்து நிற்கிறார்கள். தொடங்கி வைத்தவர் முடித்துவிட்டும் சென்றிருக்கிறார். பெரும் இக்கட்டான நிலைக்கு வந்திருக்கிறது முஸ்லிம் சமூகம்.

இடைவெளிகளை காலம் நிரப்பாது விடாது என்றாலும் அதற்கும் காலம் எடுக்கும். அதிலும் கூட அஷ்ரப் இறந்தும் பொருளாவார். அவரின் மரணத்துடன் இன்னும் உணர்ச்சிகள் தான் கட்டி எழுப்பப்படும். எதிரிகள் என இன்னும் பலர் அடையாளம் காணப்படுவர். பிளவுண்டு பிளவுண்டு போய் போய்ச் சேருகிற இடம் எப்போதும் தனித்துவம் நிறைந்ததாக இருக்கப் போவதில்லை.

முஸ்லிம் தேசம் பற்றிய கருதுகோள் கூட சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திய விளைவுதான் அன்றி முஸ்லிம்களின் நிதானித்த ஒன்றுபட்ட அபிலாஷை அல்ல. எப்போது போராட்ட சக்திகள் குறிப்பாக புலிகள் முஸ்லிம்களை முழு எதிரிகளாக அடையாளப்படுத்தத் தொடங்கினார்களோ அப்போது வேறோரு புறத்திலிருந்து முஸ்லிம் தேசம் குறித்த கருதுகோள் வெளிப்படலாயிற்று. அது தமிழ்த் தேச விடுதலைக்கான ஒரு வரலாற்றுத் தேவையாக மாற்றம் பெற்றதுதான் நாம் அவதானிக்க வேண்டியது.

முஸ்லிம் தேசம் பற்றிய சிந்தனை தேச விடுதலை பற்றிய நிதானித்த அறிவார்ந்த தேடல் கொண்ட ஒரு சிலராலே முன்வைக்கப்பட்டதை நாம் காண்கிறோம். முஸ்லிம் காங்கிரசோ ஏனைய முஸ்லிம் அரசியல் தலைவர்களோ இதை எரிகிற வீட்டில்பிடுங்கியது லாபம் என்ற கொள்கையில் அனுகினார்களே தவிர வேறெந்த அரசியல் ஞானமோ, அக்கறையோ அவர்களிடம் இருக்கவில்லை. முஸ்லிம் காங்கிரஸ் தன்னை சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி நன்றாகவே வளர்த்துக்கொண்டது. இது தமிழ் பேசும் மக்களிடத்தில் ஏற்படுத்திய சாதக பாதக விளைவுகளுக்கு தமிழ் அரசியலும் தான். பொறுப்பு. முஸ்லீம் காங்கிரஸ் தன்னை தேசிய அளவில் முஸ்லிம்களின் சார்பில் பிரதிநிதித்துவப்படுத்த முயன்று தோற்றுப் போனது. அது கட்சி அரசியலின் சகல குளறுபடிகளுக்கும் உட்பட்டது.

இப்போது அஷ்ரபின் மறைவின் பின்

தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## விவசாயிகள் ...

(4ஆம் பக்க தொடர்ச்சி...)

முதன்மையான மக்கள் பிரிவினராக நமது விவசாயிகள் திகழ்கின்றார்கள். அடக்குமுறையின் கொடுந்தளைகளுக்குள்ளிருந்தும் அழிவுச் சிதைவுகளுக்குள்ளிருந்தும் அவர்கள் மத்தியில் ஊற்றெடுக்கின்ற ஆவேஷ உணர்வுகள், சிறிலங்கா அரசின் மீதும் அதன் ஆக்கிரமிப்பு படைகளின் மீதும் இலக்கு வைக்கப்பட்ட கூரிய, வலிமையான கலைவடிவங்களாக திரண்டுள்ளன.

நமது மண்ணில், நமது மக்களினால் நிறுவப்படவிருக்கின்ற தமிழீழ மக்கள் குடியரசு என்பது, அடிப்படையில் விவசாய சாரத்தை கொண்ட குடியரசாக அமையும். நமது குடியரசின் பொருளாதாரமானது, சுயசார்பு தன்மையுடைய விவசாயத்தை அடித்தளமாக கொண்டதாக அமையும். நமது குடியரசின் அரசியல் முறைமையானது, நிலத்தின் மீதும் அதன் உற்பத்தியின் மீதும் நமது விவசாயிகளின் கட்டுப்பாட்டை உறுதிப்படுத்துவதாக அமையும். நமது விவசாய மக்களின் வாழ்விலிருந்து பிறந்த, பிறக்கின்ற கலாச்சார வடிவங்கள் நமதுதேசிய கலாச்சாரத்தின் பிரதான கூறாக உள்ளடக்கப்படும். இவ்வாறு நமது தமிழீழ மக்கள் குடியரசானது, அவசியமாகவும் இயல்பாகவும் விவசாய உள்ளடக்கத்தை கொண்ட குடியரசாக பரிணமிக்கும்!

வரதன்

## ஆக்கிரமிப்பின் 13 வருடம்...

(ஐந்தாம் ஆம் பக்க தொடர்ச்சி...)

காத்திருக்கும் ஆதிக்க சக்திகளை எதிர்கொள்ள இந்த அனுபவங்களை செழிப்பாக வளர்த்தெடுத்துக் கொள்வோம்.

நமது மக்களுக்குள் ஆழமான பிளவுகளையும் விரோதங்களையம் கோஷ்டி மோதல்களையும் விதைக்க இந்திய மத்திய அரசு எத்தனையோ உத்திகளைக் கையாண்டது. எம்மவர்களைக் கொண்டே எம்மக்களை வேட்டையாடியது. இரண்டாயிரம் மக்கள் மீது குண்டுகளைப் பொழிந்து கொன்று குவித்தது. நம்தேசத்தின் உள்ளகக் கட்டுமாணங்கள் அனைத்தையும் தரைமட்டமாக்கியது. இந்த அழித்தொழிப்புகளை எப்படி செய்து முடிப்பதென்ற வழிமுறைகளை சிங்கள படைகளுக்கும் கற்பித்துச் சென்றது.

இறுதியில் இந்தியப்படை தோற்றோடியது மட்டுமல்ல, அதற்கான பாரிய விலைகளை அப்போதும் அதற்கும் பின்பும் அவர்களே செலுத்த வேண்டியிருந்தது.

இப்போதும் அந்த ஆதிக்க சிந்தனையும் செயற்பாடுகளும் அவர்களை விட்டுப்போகவில்லை. எம் தேசத்தின் இறைமையை வேட்டையாடி வரும் எதிரி அரசின் இறைமையை இவர்கள் குத்தகைக்க எடுத்துக் காப்பாற்றப் போவதாகக் கூறி எமது இறைமையை தீய்க்கப்போவதாக அறிக்கை மேல் அறிக்கை விடுகின்றார்கள். அரசுக்கும்-அரசுக்கும் இடையிலான உறவென்கிறார்கள். மனிதாபிமான உதவி என்கிறார்கள். மலிவான போராயுத வியாபாரமென்கிறார்கள். இவற்றின் உள்ளார்ந்த அர்த்தமென்பதை ஈழத்தமிழர் அனைவரும் அறிவர். உலகமும் நன்கறியும்.

-விஜி

## மக்கள் களம்

6ம்பக்கத்தொடர்ச்சி

அது வேறு பரிமாணங் கொள்ள ஆரம்பித்திருப்பதையும் அவதானிக்க முடிகிறது. அது இனி ஒரு வெறும் கட்சியாக இருந்துவிட்டுப் போகும். இச் சந்தர்ப்பம் மீண்டுமொரு தொடக்கத்திற்கான புள்ளியாகக் கூட இருக்கலாம். ஆனால் அந்தத் தொடக்கங்களுக்கான ஆளுமைகள் முஸ்லிம் சமூகத்திடம் இல்லாதிருப்பது துரதிர்ஷ்டம். பல்வேறு கட்சிகட்ட விருப்பங் கொண்டிருந்தவர்களுக்கும் இது ஒரு சந்தர்ப்பம்!

என்னைப் பொறுத்தவரையில், முதலில் தமிழ்த் தேசப் போராட்டம் அதற்கிருக்கிற நியாயங்களோடு அதன் தேசத்தில் இருக்கிற அனைத்து மக்களையும் வென்றெடுத்தவாறு எந்தப் பாசிசச் கூறுகளுமின்றி வெற்றி காண வேண்டும். அதன் வெற்றியிலும், நியாபூர்வங்களிலும் ஏனைய சிறுபான்மை இனங்களின் வெற்றியையும் நாம் இலகுவில் கண்டு கொள்ளலாம். இப்போது இருப்பவை எந்தச் சமூகங்களுக்கும் விடுதலை யையோ தனித்துவத்தையோ பெற்றுத்தரக்கூடிய போராட்டமோ அரசியலோ அல்ல. தமிழ்த் தேசப் போராட்டம் குறுந்தேசிய வாதப் போராக மாறியிருக்கிறது. முஸ்லிம் அரசியல் வெறும் கட்சி அரசியலாக ஆகியிருக்கிறது. இப்போது எமக்குள்ள போராட்டம், விடுதலை பற்றிய சிந்தனை ஆரம்பத்திற்கு மீள்வதா அல்லது புதிதாகத் தொடங்குவதா என்பதே. இவையிரண்டுமே தமிழ், முஸ்லிம் சமூகங்களின் பரஸ்பர அங்கீகாரம், ஒற்றுமை, புரிந்துணர்வு என்கிறவைகளில் தங்கியிருப்பதாகவே நான் கருதுகிறேன். அதற்கான நம்பிக்கைகளை நாம் அங்கங்கு வெளிப்படுத்த வேண்டியிருக்கிறது. அதன் பல கூறுகளைநான் "தமிழீழத்தில்" காண்கிறேன்.

உமர்
ஏறாவூர்

## சட்ட விரோத தரப்பினரது இணைவும் . . ....

(ஆறாம் பக்க தொடர்ச்சி...)

கின்றனர். உரும்பிராய் பகுதி இன்றுவரை சாராயம் வடிப்போரின் தளமாக நிலவி வருகிறது. வன்னி பிராந்தி யத்தின் காட்டை அண்டிய பகுதிகள் மரம் தறிப்போரின் கட்டுப்பாட்டுப் பகுதியாக காணப்படுகிறது.

கொலனித்துவம் தனது கோரக் கரங்களை பதித்த இடங்களிலெல்லாம் பாரம்பரிய தொழில்கள் சிதைக்கப்பட்டும், அரசுடமையாக்கப்பட்டும் வந்ததன் மறுபுறம், இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் பிரிவினரின் ஒரு பகுதி "சட்டவிரோத" செயற்பாடுகளில் ஈடுபடத் தொடங்கியதும், இவர்கள் மத்தியிலிருந்து சிலர் அரசுக்கு அச்சுறுத்தலாக ஆயுதங்களுடன் வாழும் உதிரிப் பிரிவினராக உருவாகியதும் பொதுவான அம்சமாக உலக கொலனித்துவ வரலாற்றில் காணக்கிடக்கிறது.

அரச அடக்குமுறைக்கெதிரான போராட்டங்கள் கருக்கொள்கையில், போராட்ட தரப்புடன் இத்தகைய அரச எதிர்ப்பு உதிரி பிரிவினரும் இணைந்து கொள்கின்றனர். புரட்சியாளர்களும் நிலவும் சட்டமுறைமைகளுக்கு எதிராக செயற்படுபவர்கள் எனும் வகையில், புரட்சிகர தரப்புடன் அரசினால் பாதிக்கப்படும் உதிரிப் பிரிவு இணைந்து கொள்ளும் சூழல் அதிகமாகவேயுள்ளது. நமது தேச விடுதலைப் போராட்டத்தின் தொடக்க காலங் களில் இத்தகைய இணைவு குறிப்பிடத்தக்க அளவில் நிகழ்ந்தது.

70களின் முற்பகுதியானது எழுச்சிபெற்று வந்த நமது தேசவிடு தலைப் போராட்டம் ஆயுதப் போராட்ட வடிவிற்கு பரிணமிக்கும் காலகட்டமாகின்றது. சிங்கள இனவெறியின் பிடியிலிருந்து தேசத்தை விடுவிக்கும் நோக்கு டன் வெவ்வேறு தரப்பினரும் போராட்டத்தில் குதிக்கின்றனர். ஆயுதப் போராட்டக் குழுக்கள் முகிழ்க்கின்றன.

ஆயுதப் போராட்ட அமைப்புகளை உருவாக்கியதிலும், அதில் முக் கிய பங்கேற்றதிலும் வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகக் கொண்டவர்களும் கடலோடி சமூகத்தை சார்ந்தவர்களுமான விடுதலைப் போராளிகளது பாத்திரம் குறிப்பிடத்தக்கதாகும். கடல் வணிகமும் கடலோடி சமூகத்தின் அரச எதிர்ப்பு போர்க்குணாம்சமும் தேச விடுதலைப் போராட்டத்திற்கு பலமான தளமாயின. மேலும், போராட்ட அமைப்புக்களுக்கு அவசியமான ஆயுதம், இடமாற்றம் போன்ற விடயங்களுக்கும் இக்கடலோடிகளின் "சட்ட விரோத" பின்புலம் பெரிதும் உரமாக இருந்தது.

கடலோடிகளாகவும் சாராயம் வடிப்போராகவும் மரம் தறிப்போராகவும் வாழ்க்கையை ஆரம்பித்து பின்னர் உதிரிப்பிரிவினராக மாறியவர்களின் வெடிகுண்டுத் தயாரித்தல், ஆயுதம் வைத்திருத்தல், துணிகரச் செயற்பாடுகள், அரச எதிர்ப்புப் போர்க்குணாம்சம், தலைமறைவு வாழ்க்கை முறைமை போன்றன போராளிகளுக்கு தேவையான அனுபவங்களாக இருந்தன. இவ்விதமாக ஆரம்பத்திலேயே போராளிக் குழுக்களின் ஆயுத நடவடிக்கைகளுடனும் தலைமறைவு வேலை முறைகளுடனும் உதிரிப்பிரிவினரின் அனுபவங்களும் பங்களிப்புக்களும் இணைந்து போராட்டத்தில் குறிப்பான பாத்திரமாற்றியது.

"ஏற்கனவே திரட்டப்பட்டுவிட்ட வர்க்கங்களும், பிளவுபட்டுக் கிடக்கும் வர்க்கங்களும் இணைந்து சேர்ந்து கலகம் செய்கிற போது தான் புரட்சி என்பதே சாத்தியமாகிறது. . . . சீனப் புரட்சியைப் பார்ப்போம்: கோடிக்கணக்கான விடலைகள், ஊர்சுற்றிகள், பொறுக்கிகள் புரட்சிக்கு முந்திய காலத்தில் அங்கே அலைந்து கொண்டிருந்தார்கள். செஞ்சேனையின் முதன் முதலான அடித்தளமாக இவர்கள்தான் ஆனார்கள்", என்கிறார் விக்டர் எனும் பிரெஞ்சு மாவோயிஸ்ட்டு. உதிரிதரப்பினரை புரட்சிகர சித்தாந்தத்தால் மேலாதிக்கம் செய்ததன் மூலம் செஞ்சேனைக்குள் இந்த முரண்பாட்டை மாவோ வெற்றி கொண்டார் என்பதையும் வரலாறு நிரூபித்துள்ளது.

போராட்டத்தில் இணையும் உதிரித் தரப்பினரது அரசை எதிர்த்திடும் உறுதி, போர்க்குணாம்சம் ஆகியவற்றை புரட்சியாளர்கள் தாம் சுவீகரித்துக் கொள்வதும், அதேபோல் புரட்சிகர சித்தாந்தத்தை உதிரிப்பிரிவினர் உள்வாங்கி புரட்சிக்காக தம்மை தகவமைத்துக் கொள்வதன் மூலமுமே இந்த புரட்சியாளர் - உதிரிப்பினரிவினர் கூட்டிணைவு அர்த்தமுடையதாக, சமூகப் பயன்மிக்கதாக அமையும்.

- சுபத்திரா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# தமிழீழம்

'The Editor'
BM Box 4002
London. WC IN 3XX
United Kingdom


## ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கு எதிராக ஓரணி திரள்வோம்!


www.thamileelam.org
info@thamileelam.org


சிறிலங்காவில் புதிதாக அமைந்திடும் அரசாங்கத்தின் நிறம் எதுவாயினும் அது சிங்கள பாசிச அரசாங்கம் என்பதே உண்மை. நேரடியாகவே நம்மீது கட்டற்ற அழித்தொழிப்பு யுத்தத்தை பிரகடனப்படுத்தி நமது தேசத்தை அது துவம்சம் செய்யப் போகிறது. இதை சந்திரிகா பகிரங்கமாகவே அறிவித்துவிட்டார். "சமாதானத்திற்கான யுத்தம்" எனும் முகமூடிகள் இனி அதற்கு காலங்கடந்த தந்திரோபாயம்.

எதிரியின் அழித்தொழிப்புப் போரை நமது மக்கள் பலத்தினால் எதிர்கொள்வோம். நமது மக்களிடம் பொதிந்துள்ள போராட்ட ஆற்றலை, வலிமையை வெளிக் கொணர்வதில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தலைமைச்சக்தியாக இருக்கும் விடுதலைப் புலிகள் அக்கறை கொள்ள வேண்டும். தேசத்தின் அனைத்து சமூகப் பிரிவினரும் அமைப்பாகி போராட்டத்தில் பங்கேற்பதற்கான சூழ்நிலை உடனடியாக உருவாக்கப்பட வேண்டும். அனைத்து வழிமுறைகளினூடாகவும் மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்திடும் வழிவகைகளை வளர்த்தெடுத்திட வேண்டும். நமது மக்களது போராட்ட வெள்ளத்தில் எதிரிகள் மூழ்கடிக்கப்பட வேண்டும்.

நமது போராட்டத்தின் மூடுண்ட, இறுகிய, ஜனநாயகமற்ற, எதேச்சாதிகார அரசியல் தன்மையின் காரணமாக போராட்டத்தில் பன்முக அரசியல் தலைமைத்துவம் இன்னமும் கைவரப் பெறவில்லை. இதன் காரணமாக நமக்கான நட்பு சக்திகள் மிக அரிதாக இருப்பதுடன். சர்வதேச போராட்ட சக்திகள் கூட நம்முடன் நெருங்கிச் செயற்படுவதற்கும் நம்மை பகிரங்கமாக ஆதரிப்பதற்கும் கூட தயக்கம் கொண்டுள்ளன.

சிங்கள அரசை ஆதரித்து அதனுடன் கூட்டணி அமைத்திருக்கும் இந்திய பிராந்திய ஆதிக்க சக்திக்கும், ஏகாதிபத்திய முகாமுக்கும் எதிரான அனைத்து பிராந்திய, சர்வதேசிய போராட்ட, சக்திகளுடனும் நட்புறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய தேவையை நமது தேசம் கொண்டுள்ளது. இதன் மூலமே நம்மை சூழ்ந்து வரும் எதிரிகளை வெற்றிகரமாக நம்மால் முறியடிக்க முடியும்.

தேசம் எதிர்கொண்டிருக்கும் ஆபத்தான நிலையைக் கருத்திற் கொண்டு போராட்டச் சூழலின் அரசியல் பண்பை தேசத்திற்கு சாதகமானதாக்க வேண்டிய பொறுப்பு பிரதானமாக விடுதலைா் புலிகள் இயக்கத்தையே சார்ந்துள்ளது.

நமது போராட்டத்தின் இந்த எதேச்சாதிகார போக்கின் காரணமாக நமது முதன்மை நட்பு சக்தியாக திகழ்ந்த முஸ்லிம் தேசம் எதிர் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது தொடர்ந்தும் நமது தரப்பு நடவடிக்கைகளால் முஸ்லிம் தேசத்துடனான உறவு துருவ நிலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. முஸ்லிம் தேசம் என்பது தனித்துவமான தேசம் எனும் வகையில் அவர்களது சுதந்திரமான, சுயாதீனமான அரசியல் முன்னெடுப்புகளை கௌரவிப்போம். அதில் சரி பிழை கூறும் அதிகாரங்கள் எதுவும் நமக்குக் கிடையாது. முஸ்லிம் தேசத்தின் சொந்த அரசியல் செயற்பாடு மீதான நமது தேசத்தின் அணுகுமுறையும் அவர்களுடனான உறவைத் தீர்மானிக்கும் காரணியாயுள்ளது. இதில் நமது தேசத்தின் அரசியல் தலைமையான விடுதலைப் புலிகள் மிகவும் பொறுப்புணர்வுடனும் அவதானமாகவும் நடந்துகொள்ள வேண்டும் என்பதை பகிரங்கமாக சுட்டிக்காட்டுகிறோம்.

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களின் போது உயிரிழந்த முஸ்லிம் பொதுமக்களுக்கு தமிழ்த் தேசத்தின் சார்பில் நமது அஞ்சலிகளை செலுத்துகிறோம்.


வட அமெரிக்கத் தொடர்புகட்கு:
300 Borough Dr.,
PO Box 47032
Scarborough,On.
M1P 4ZP
Canada

ஐரோப்பியத் தொடர்புகட்கு:
'The Editor'
BM BOX 6769
LONDON
WCI 3XX, U.K.
Tel: 07041372064


## மானுடத்தின் பெறுமதி இதுதானா?

யாழ் வைத்தியசாலையில் பிரேதங்களைப் பத்திரப்படு த்தும் வசதிகளின்றி நமது மக்களின் உடலங்கள் அழுகிக் கிடக்கின்றன. மானுட உயிரும் உடலும் எத்தனை பெறுமதியானவை? மரணத்தின் பின்னால் மனித உடலங்களுக்கு உலகிலுள்ள மக்கள் சமூகங் கள் அனைத்தும் எத்தனை கௌரவமளிக்கின்றனர். கௌரவத்திற்குரிய மனித உடலுக்கு ஏன் நமது தேசத் தில் மாத்திரம் இத்தனை குரூர அவலம் நேர்கிறது?

இத்தகையதொரு நிலைக்கு நமது தேசத்தை தள்ளியுள்ள இந்த மானுட விரோதக் குற்றவாளிகள் யார்? யுத்தத்திற்காக கோடிக் கணக்கில் செலவ ளித்து எம்மை அழித்தொழிக்கும் அரசால் எமக்கு வசதிகள் கொண்ட வைத்தியசாலையை ஏற்படுத்தித் தர முடியாதா? செல்லாலும் சன்னங்களாலும் ஏற்பட்ட காயங்களைச் சுமந்து வீதியோரங்களிலும் வைத்தி யசாலை நடைபாதைகளிலும் நாம் விலங்குகள் போல் இறந்து வீழ்வதை தடுத்து நிறுத்த முடியாதா?

இல்லை. நாம் மனிதர்களாக வாழ்வதை அவர்கள் அடிப்படையிலேயே விரும்பவில்லை . தம்மை எதிர்ப்பவர் களை "நாரடிப்பது" என்பார்களே, தம்மை எதிர்ப்பவர் களின் அவல நிலைபார்த்து அகமகிழ்வார்களே, அதைத்தான் இவர்களும் செய்கிறார்கள். இவர்கள் திட்டமிட்டே எங்களை சிதைத்து சின்னாபின்னப் படுத்துகின்றார்கள். விலங்குகளைக்கூட இரக்கம் காட்டு என போதிக்கும் தர்மத்தை ஏற்றுள்ளதாக சொல்லும் இவர்கள் நம்மை இந்நிலைக்கு உள்ளாக்கு கின்றனர். இதன் மூலமாவது நமது விடுதலை உணர்வை கைவிட செய்யலாமென நப்பாசை கொள்கிறார்கள். இதற்கெல்லாம் நமது மக்கள் பதிலளித்தே தீர்வார்கள். இவர்களுக்கு மாத்திரமல்ல, இவர்களுடன் இணைந்து நமது போராட்டத்தைக் காட்டிக் கொடுக்கும் துரோகிகளுக்கும் சேர்த்தே.

### பாலஸ்தீன எழுச்சி மீண்டும்:

100க்கும் மேற்பட்ட இளம் பலஸ்தீனர்களை இஸ்ரேலிய ஆக்கிரமிப்புப் படைகள் கொன்று குவித்துள்ளன. மீண்டும் அரபுலகம் சியோனிசத்திற்கும் அதன் ஏகாதிபத்திய எஜமானர்களுக்கும் எதிராக கிளர்ந்துள்ளது. பல அமெரிக்க ஆதரவு அரபு நாடுகள் கூட பலஸ்தீனர் மீதான கொடுமைகளை கண்டித்துள்ளதுடன் கிளர்ச்சியை ஆதரித்தும் தமது படைகளை அனுப்புவதற்கும் முன்வந்துள்ளன.

ஆக்கிரமிப்பாளர்களும் ஏகாதிபத்திய சக்திகளும் கூட்டிணைந்து என்னதான் அழுத்தங்கள் இராஜதந்திரங்களை பயன்படுத்தி பலஸ்தீனர்களின் மீது போலியான அரசியல் தீர்வுகளை திணித்தாலும் அதனை நியாயப்படுத்த பத்துவருடங்களுக்கு மேல் செயற்பட்டாலும், அதன் சுதந்திரப்பிரகடனத்தை மிரட்டியும் சலுகைகாட்டியும் தடுக்க முயன்றாலும், பாலஸ்தீன தேசியப்பிரச்சனையின் அடிப்படை கூறுகள் தீர்க்கப்படாது விட் டால் அது மீண்டும் மீண்டும் வெடித்துக் கிளம்பும் என்பது மறுபடியும் நிரூபிக்கப்பட்டுள்ளது. எந்தவொரு தேசிய அடக்குமுறைக்கும் இதுவே பொது விதியாகும்.

இருபது வருட ஆக்கிரமிப்புக்குப் பின்பும் லெபனானில் இருந்து இஸ்ரேலிய ஆக்கிரமிப்புப் படைகள் அண்மையில், விரட்டியடிக்கப்பட்டன. அந்த அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்கு முன்பே அடுத்த கிளர்ச்சி பலஸ்தீனர்களின் சொந்த மண்ணில் வெடித்துள்ளது. இந்த கிளர்ச்சியானது நிச்சயம் வெற்றி பெறும். ஏகாதிபத்தியங்களும் சியோனிச ஆக்கிரமிப்பு மீண்டும் படுதோல்வியடைவதும் நிச்சயம். இப்போராட்டத்தில் பங்குகொண்டு தம்முயிரீர்ந்த இளம் மக்கள் போராளிகளுக்கு நம் தேசத்தினதும் அடக்கப்படும் தேசங்களினதும் தலைகள் வணங்குகின்றன. இறுதி வெற்றியடைய , நமது தேசத்தின் ஒருமைப்பாடும் ஆதரவும் என்றும் பலஸ்தீன மக்களுக்கும் அவர்களின் வீரஞ்செறிந்த போராட்டத்திற்குமே.




www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்